

# திறவுகோல்

2055
சித்திரை
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் மாணவர்கள்
# தொடர் – 7
# தீபக் எனும் மகான்

மன்னிப்பு மனித வாழ்வியலில் மிகப் பெரிய சொல்லாகும். அதிலும் உடனடி மன்னிப்பு என்பது அதில் ஆகச் சிறந்த சொல் என்பர். இந்த சொற்களின் உண்மையான பொருள் புரியாத எத்தனையோ ஆசிரியர்கள் இங்குள்ளனர். ஐம்பது வயதைக் கடந்த நிலையிலும் உப்புச் சப்பில்லாத, ஒன்றுக்கும் உபயோகப்படாத, தக்க காரணமே இல்லாத எளிதில் அணைந்து விடும் சினத்தை இப்போதும் பெரும் மூட்டைக்கட்டிக் கொண்டு வன்மமாக வளர்ந்து கிடப்பது இங்கு பல பேரிடம் காண முடியும்.

நாம் வாழும் இந்த பூமியில் எத்தனையோ விதமான குணங்கள் நிறைந்த மனிதர்கள் நிறைந்துள்ளனர். அவர்களுள் பலர் கூடவே வாழ்கின்றனர். அல்லது எதிரில் நிற்கின்றனர். வேண்டுமென்றே வெறுப்பு அரசியலை விதைத்து மனிதக் கூட்டத்தைப் பிளவுபடுத்த நினைக்கும் கயமைக் கும்பலில் மிகுந்த சகிப்புத்தன்மையும் சக மனிதர்களை மன்னிக்கும் மனநிலையும் அதிகம் நிரம்பியவர்களாக ஆசிரியர் பெருமக்கள் இருக்க வேண்டும் என்பது மானுட நீதியாகும். ஆனால், நடப்பு மிகவும் வருந்தத்தக்கதாக இருப்பது தான் வேதனைக்குரியது.

எத்தகைய துன்பம் நேரினும் அன்பும் கருணையும் கொண்டவர்கள் ஆசிரியர்கள். மாறாக, மாணவர்கள் குறும்பும் பிழையும் நிரம்பியவர்கள். கல்வி ஒன்றே இருவேறு இணைகோடுகளை இணைக்க வல்ல தொடர்வண்டியாக உள்ளது. ஆசிரியர்கள் மேற்கொண்ட கண்டிப்பு மற்றும் தண்டிப்பு ஒருவித எல்லைக் கடந்த நிலையில் மூன்றாம் நபராக விளங்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் பாதிக்கப்பட்டோர் பக்கம் நின்று கேள்விக் கேட்கும் சூழல் சிலநேரங்களில் வகுப்பறைகளில் அமைந்து விடுவதுண்டு. தம் தரப்பு அநியாயத்தை உணராமல் இதற்கு காரணமான தம்மால் பாதிப்புக்கு உள்ளான குழந்தைகளிடம் தொடர்ந்து காட்டிவரும் வன்மபுத்தி படைத்த ஆசிரியர்களும் பலர் இங்குள்ளனர். இது மிகையல்ல.

ஆசிரியர்களைக் குறைத்து மதிப்பிடுவதும் அவர்களைக் குற்றவாளிகள் கூண்டில் நிறுத்திப் பார்ப்பதும் இங்கு நோக்கமல்ல. அதற்காக உண்மைநிலையை மறைப்பதும் நல்லதல்லவே? இந்த சமூகம் ஆசிரியர்களை நல்வாழ்விற்கு வழிகாட்டும் வாழும் கடவுளர்களாகத் தான் நோக்குகிறது. குழந்தைகள் குறைகுடமாகத்தான் எப்போதும் தழும்பிக் கொண்டிருப்பார்கள். ஆசிரியர்கள் தாம் நிறைகுடமாக இருந்து அவர்களை நல்வழிப்படுத்த

முயன்று கொண்டே இருக்க வேண்டும். அதற்கு மன்னிப்பும் மறப்பதும் தக்க நெம்புகோல்கள் ஆகும். இஃது என் எண்ணம்.

"சார்! நேத்து ஒரு பிரச்சினை ஆயிட்டு!"
பஞ்சாயத்து வந்து விட்டது. பள்ளிகளில் இதனை அதிகம் காணவியலும். பைசாவுக்குப் பிரயோசனப்படாது. ஆனால், மலை போல் மூட்டைக்கட்டிக் கொண்டு வந்து அவிழ்த்து விடுவார்கள்.

"ஏன்? என்னாச்சு?!"

வாடிக்கையான ஒன்று தான். அதற்காக ஆச்சரியம் படாமல் இருக்க முடியாது அல்லவா?
"தீபக்கோட வூட்லேர்ந்து வந்து எங்க எல்லாரையும் ஒரே சத்தம் போட்டுட்டுப் போய்ட்டாங்க சார்!"

குற்றப் பத்திரிகை வாசித்தனர். ஒருசேர. நேற்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிலர். தீபக் ஒரு கருப்பழகன். பலமுறை அவனது துறுதுறு திராட்சை விழிகள் குறித்து பெருமையாக வகுப்பில் ஏனைய மாணவர்கள் மத்தியில் புகழ்வதும் உண்டு. அதற்கு காரணம் படிப்பில் அவன் படுமோசம். இதை ஓர் ஆசிரியராக நான் சொல்லக் கூடாது. உங்கள் புரிதலுக்காக அப்படியொரு பிரயோகம். அவ்வளவு தான். அதாவது, இதுமாதிரி பிள்ளைகள் கல்வி அகராதியில் கற்றல் குறைபாடுகள் மிக்கவர்கள் என்று வரையறை செய்யும். அதாவது, நன்றாக வாசிப்பதில் குறைபாடு அவனுக்குள்ளது. அதன் காரணமாக, ஒழுங்காக எழுதுவதிலும் பிரச்சினைகள் இருந்தன.

இதுபோன்ற மாணவர்களை ஓரளவிற்கு படிக்கும் மாணவர்கள் சற்று ஒதுக்கி வைத்துப் பார்க்கும் வழக்கம் மாணவர் சமூகத்தில் இயல்பானதே. இதைக் களைவதிலும் ஆசிரியர் அவ்வப்போது தொடர்ந்து முன்முயற்சி எடுத்துக் கொண்டே வரவேண்டியது அவசியம். அதன் பொருட்டு, அதுபோன்ற மாணவர்களிடம் காணப்படும் கல்வி சாரா தனித்துவமான பண்புகளையும் திறமைகளையும் பொதுவில் வைத்துப் பாராட்டுவதும் இன்றியமையாதது. கூட படிக்கும் சக மாணவர்கள் அவனிடம் காட்டிய கற்றல் சார்ந்த நவீனத் தீண்டாமையின் வடிவமாகக் காணப்படும் ஏளனம் மற்றும் புறக்கணிப்பு ஆகியவை தொடர்ச்சியாகத் திரைமறைவில் நடந்து வந்துள்ளது இப்போது வெளிச்சத்திற்கு வந்துவிட்டது. இத்தனைக்கும் இவர்கள் அனைவரும் ஒரே சமூகத்தினர். மேலும், ஒருவருக்கொருவர் உறவினர்கள். அதனால் இதனைச் சாதிய சிக்கலுக்குள் அடைத்து வைத்து பார்க்க வேண்டிய அவசியமில்லை.

மறுநாள் பள்ளித் தொடங்கியதும் இரண்டு தரப்பினரின் பெற்றோரும் முதல் வேலையாகப் பள்ளிக்கு நேரில் வந்து அவரவர் தரப்பு நியாயங்களை முன்வைத்துச் சென்றனர். பள்ளி

நிர்வாகம் இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தது. அதன்பின் அங்கு புகைச்சலுமில்லை. நமைச்சலுமில்லை. ஆனாலும், மாணவர்களிடையே காணப்பட்ட நீறுபூத்த நெருப்பு இன்னும் அணையாமல் இருப்பதைக் கண்கூடாகக் காண முடிந்தது. அதன்விளைவாக, இனி உன் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லை என்பதாக இருந்தது. நேற்றைய சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மனநிலை. தீபக்கும் செய்வதறியாது அவர்களிடையே நெளிந்தான். எனக்கு இதை இப்படியே விட்டு விட மனம் ஒப்பவில்லை. தனியாக இருவரையும் அழைத்தேன். இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர.
"தீபக்! இங்கு வா. என்ன நடந்துச்சு?"

"சார்! இவிங்க எப்பவும் என்னை ஸ்கூல் விட்டு போறப்ப வர்றப்ப கிண்டல் பண்ணிக்கிட்டு இருக்காய்ங்க. நேத்து கூட என்னோட அக்காவோட ஸ்கூல் பேக்கை சைக்கிளில போறப்ப எனக்குத் தெரியாம கீழ விழுந்ததை எடுத்து ஒளிச்சு வச்சுட்டாய்க சார்"

கண்ணீர் பொலபொலவென்று கொட்டியது. கூடவே ஆத்திரமும் கொஞ்சம் எட்டிப் பார்த்தது.

எதிர்தரப்பை ஏறிட்டேன். அவர்களிடமிருந்து எந்த மறுப்பும் இல்லை. ஏனெனில், மாணவர்கள் மத்தியில் நான் அவர்களை எதிர்கொள்ளும் முதல்நாளிலேயே தவறை நேர்மையுடன் ஒத்துக் கொண்டால் அவர்கள் மன்னிக்கப் படுவார்கள் என்று கூறி வைத்துள்ளேன். அதன்படியும் நடந்து கொள்வேன். மேலும், என் முன் பொய் பேசி நீ நல்லவன் என்று நடிப்பதில் ஒரு புண்ணியமும் இல்லை. கூடவே, சத்தியம் செய்து அதை நிரூபிக்க வேண்டிய அவசியமும் உனக்கில்லை. என்னிடம் எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் உண்மையான வார்த்தை உள்ளபடி தெரிவிக்கலாம் என்கிற எண்ணத்தை விதைத்ததோடு அல்லாமல் அதற்கான இடமும் வழங்கும் வழக்கம் இப்போதும் உண்டு. அதுதான் இப்போதும் வேலை செய்கிறது.

குழந்தைகளின் குறும்புத்தனம் சில சமயங்களில் எல்லை கடந்து விடுவதுண்டு. எல்லாவற்றையும் எளிதில் விளையாட்டாக எடுத்துக் கொள்வதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. தீபக்கிற்கு அவன் அக்காள் மீது பாசம் மிகுதி. அவளது பொருள் மீதும் அது நீட்சியடைந்திருந்தது.

"ஏன்டா! அவனோட புத்தக மூட்டையை ஒளிச்சு வச்சுருந்தீங்கன்னா கூட இம்புட்டு பதறி இருக்க மாட்டான். அவன் அக்காவோடதை ஏன்டா எடுத்து ஒளிச்சு வச்சீங்க?!"
அங்கு கோலோச்சிய இறுக்கத்தை மெல்ல என் பேச்சு உடைத்ததில் அவர்களும் கொஞ்சம் இயல்பு நிலைக்கு மெதுவாக வந்திருந்தனர். ஒருவித நமுட்டுச் சிரிப்புடன்,

"அதுதான் சார் மொதல்ல கீழ வுழுந்துச்சு!"

என்றார்கள். பாவமாக.

"ஆமா சார்! என்னோடதுனா கூட வுட்ருப்பேன் சார். அக்காவோடதை எடுத்து ஆட்டம் காட்டிட்டாய்ங்க சார்!..."

பழைய கன்னக்குழி விழும் அழகு சிரிப்பும் சக நண்பர்கள் மீதான புதிய கோவமும் தீபக்கிடமிருந்து மாறிமாறி வெளிப்பட்டது.

"இதுக்குப் போயி கரைச்சலா செய்வே? "
"சாரி சார்!"
"இவிங்க யாரு ஒனக்கு?"
"ப்ரண்ட்ஸ் சார்!"
"டேய் ஒங்களுக்கு?"
"ப்ரண்ட் சார்!"
"அப்பறம் என்ன?"
"கட்டிப்புடிக்கணுமா சார்?"
"கேட்காத. செய்யி!"

"பரமு! நீயேன் இப்புடி ஏக்கமாப் பார்க்குறேனு தெரியுது? ஒனக்குக் குடுகுடு கெழவிதான்!" வகுப்பே சிரிப்பலையில் கொஞ்சநேரம் மிதந்தது. பெண் பிள்ளைகள் அதை நினைத்து நினைத்து தமக்குள் சிரித்துக்கொண்டே இருக்க, பரமகுரு வெட்கத்தில் சிவந்தான். ஆண் பிள்ளைகள் படும் வெட்கமே ஒரு தனி அழகுதான். எல்லோரின் பார்வையும் அவன் பக்கம் திரும்ப...

"போங்க சார்!"

"சாரிடா குட்டி! ச்சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். கோச்சுக்காதே!"
அதற்கும் அவனிடமிருந்து வந்த பதில்

"போங்க சார்."

எத்தனை கிச்சுக்கிச்சு மூட்டினாலும் மனக் குரங்கு சில பொழுதுகளில் புதிய சூழலில் கொஞ்ச நேரம் வாழ்ந்துவிட்டு மறுபடியும் பழைய வாழ்க்கைக்குச் சென்று விடும் தானே? அதுபோல் தான் அங்கும் சூழல் நிலவியது.

"தீபக்! சாயந்தரம் நீ ஸ்கூலைப் பூட்டுவதற்கு இவிங்களோட இருக்க வேணாம்.!"
சரி என்பது போல் தலையாட்டினான். விட்டு விடுதலையான உணர்வு அவனுக்குள். அது

அவனது முகத்திலும் தென்பட்டது.

"டேய்! நீங்களும் அவன் இருக்கணும்னு நெனைக்காதீங்கடா! கொஞ்ச காலம் போவட்டும்."

இவர்களும் வேறுவழியின்றித் தலையாட்டினார்கள். மனத்திற்குள் மேலும் ஒரு சுமை கூடுகிறதே என்கிற கவலை வேறு தொற்றிக் கொண்டது.

பிரச்சினை ஒருவழியாக ஓய்ந்தது என்பதில் எல்லோர் முகத்திலும் மனத்திலும் மகிழ்ச்சி. வழக்கம் போல் அன்றும் பள்ளி கடைசி மணி ஒலித்தது.

எல்லோரும் வீட்டிற்குப் போகத் தயாரான நிலையில் அப்போதுதான் கவனித்தேன். தீபக் காலையில் உறுதியளித்தது போல மாலையில் வீட்டிற்கு முதல் ஆளாகப் பறந்து செல்லாமல் கால்களை நகர விடாமல் பின்னிக் கொண்டிருந்தான். வியப்பு எனக்குள் தாண்டவமாடியது. எட்டு மற்றும் ஏழாம் வகுப்புப் படிக்கும் ஓர் ஐந்தாறு மாணவர்கள் மட்டும் நிறைந்த பள்ளிப் பாதுகாப்புப் படைக்கும் ஒரே ஆச்சர்யம். எப்போதும் சொல்லாமல் கொள்ளாமல் ஒன்றாம் வகுப்பு பிள்ளைகளுடன் போட்டிப் போட்டுக்கொண்டு ஓடி ஒளிவதையே வாடிக்கையாக வைத்திருப்பவன் இன்று கடைசியாகக் கூட ஓடாமல் நிற்கிறானே!

மெல்ல என்னைப் பார்த்தார்கள். என்ன நடக்கிறது என்பது போல்.
"நாந்தான் காலையிலேயே ஒன்கிட்ட தெளிவா சொன்னேனே!...நீ சாயந்தரம் பூட்ட இருக்க வேணாம்னு? அப்பறம் ஏன்?..."

"இல்லை சார்! நான் இருக்கேன் சார்!"
முகம் கோணியது. உடல் குழைந்தது. முகத்தில் ஒருவித குளுமை படர்ந்து புன்னகையும் வெட்கமும் புணையல் போட்டுக்கொண்டு இருந்தது.

"அவிங்க தான் ஒன்னைக் கிண்டல் கேலிப் பண்றாங்கன்னு சொன்னீயேடா?"
நானும் விடவில்லை. மற்றவர்களுக்கு இங்கு என்ன நடக்கிறது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்தனர்.

"பரவாயில்ல சார்! நானும் இனிமே இவுங்க கூட ஒத்தாசை பண்ணிட்டு வூட்டுக்குப் போறேன் சார்!"

எனக்கு கண்ணீரே வந்து விடும் போலிருந்தது. அவனை அப்படியே வாரிக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அவன் சொன்னதைக் கேட்ட அவனது நண்பர்கள் தம்

தவறை உணர்ந்து அவனை மனதார ஏற்றுக்கொள்ள நினைத்ததை அவரகளது கனத்த மௌனமே காட்டிக் கொடுத்து விட்டது.

காலம் கடந்த மன்னிப்பு சில நேரங்களில் யாருக்கும் எந்த பலனையும் தராமல் கூட போய்விடக் கூடும். வெகு சீக்கிரத்தில் தரப்படும் மன்னிப்பே எல்லாவற்றையும் விட மேலானது. நெறிபிறழும் மனித மனம் அப்படி கொடுக்கப்படும் மன்னிப்பால் தன்னைத் திருத்திக் கொள்ளும் என்பது அன்று என் கண்முன் நிரூபணம் ஆனது. அந்தவகையில் தீபக் அன்று எனக்கு மாணவனாகத் தெரியவில்லை. மன்னிப்பின் மகத்துவம் புரிய வைத்த மகானாகக் காட்சியளித்தான்.

வகுப்பு தொடரும்...

—

முனைவர். மணி கணேசன்,
பட்டதாரி ஆசிரியர்,
கைப்பேசி: 7010303298

---

# ஏது..? ஏது..?

கடவுச்சீட்டு காற்றுக்கு ஏது?
பூட்டப்பூட்டு அலைகளுக்கு ஏது?

நெருப்பினில் குளிர்ச்சி உலகினில் ஏது?
குழப்பத்தில் மகிழ்ச்சி மனதினில் ஏது?

பறவைகள் தானே வானத்தின் தூது!
பறந்து செல்லும் வழித்தடம் ஏது?

ஓடும் நதிக்கு தடைகள் ஏது?
ஓயாத முயற்சிக்கு தோல்விகள் ஏது?

பாடும் குயிலுக்கு ராகங்கள் ஏது?
ஆடும் மயிலுக்கு இன்னிசை ஏது?

உயிரின் இடமோ உடலினில் ஏது?
பிரிந்த உயிரின் தடமோ ஏது?

பசிக்கு உலகில் நிறமும் ஏது?
மனிதம் ஒன்றே உயிர்களின் தாது!

அன்பைக் கொள்ளும் உயிர்கள்
எதுவோ...
அதுவே உலகின் அதிசயம் கேளு!

—

வாழ்வியல் கவி,
சா.நாகூர் பிச்சை,
துபாய்.



# எல்லாப்புகழும் தமிழுக்கே!

அன்புத்தமிழே !
அருந்தவச் சிறப்பே!
அகிலம் வாழ்த்தும்
அருட்பெரும் மொழியே!

திங்கள் ஒளியாய்
தீண்டும் இதமே!
பொங்கும் உளையாய்
போரிடும் மறமே !

சங்கம் வளர்த்த
சத்திய வடிவே!
எங்கும் நிறைந்த
எல்லாப் புகழே!

உள்ளம் பொன்னாக்கும்
உன்னதப் பொருளே !
சொல்லில் சுவையேற்றி
சொக்கிடும் எழிலே !

வல்லினமே மெல்லினமே
வடிவான இடையினமே !
வில்லினமே மீனினமே
வீழாத புலியினமே !

தின்னத்தின்ன திகட்டாத
தித்திக்கும் நறுஞ்சுவையே!
அள்ளஅள்ள குறையாத
ஆர்த்தெழும் அமுதசுரபியே !

கடையேழு வள்ளலின்
கரம் ஈந்த செல்வமே !

கம்பன் கவிமழையின்
கட்டற்ற வெள்ளமே !

தீயில் அழியாத
தீந்தமிழே தீவிரமே!
நீரில் மூழ்காத
நீதியின் வாதியே!

முத்தே மணியே!
முக்கால நித்தியமே!
கண்ணே கருணையே
காதலின் ஆருயிரே!

கன்னித் தமிழே
கற்பகத் தருவே
என்றும் உனையே
எழுதிக் களிப்பேன்.

சாகாது எங்கள் தமிழ்!
(இன்னிசைவெண்பா)

குறிஞ்சி கிழவன் முருகன் அருள
அறிவில் உயரிய ஔவை மொழிய
உலகில் புகழுடன் ஓங்கும் தமிழின்
நலங்களை வாழ்த்திப் பாடு.

ஆயர் வணங்கிட ஆனினம் வாழ்த்திட
மாயவன் வாழ்ந்திடும் மாவன
முல்லையாய்
ஆகாயம் தாண்டிய ஆயகலை தோற்றிய
சாகாது எங்கள் தமிழ்.

பசித்துயர் போக்கிடும் பண்புடை
மாந்தர்
வசிக்கும் மருத வயல்வெளி செழிப்பாய்
இலக்கிய வேளாண் விளைத்திடும்

சான்றோர்
புலமைத் தமிழே உயிர்.

உப்பையும் மீனையும் தப்பாமல் தந்தருளி
குப்பங்கள் காக்கும் குலதெய்வம்
நெய்தலாய்
என்றென்றும் சீரளமை மாறாமல்
பேரழகில்
மின்னிடும் நற்றமிழ்வாழ் க.

மழையின்றி வாடிடும் பாலை மனிதர்
குழைவுடன் பேசிடும் காதல் நறுமொழி
வீரத் திருமொழி வெய்யோன் சுடுமொழி
பூரண பொற்றமிழ் போற்று.

நிலமைந்தும் ஆள்கிற பைந்தமிழ்
வாழ்க!
உலகனைத்தும் வாழ்கிற செந்தமிழ்
வாழ்க!
அயல்மொழி காக்கும் அருந்தமிழ் வாழ்க
உயர்தனி செம்மொழி நீ.

தூது செல்லடி தமிழ்த்தோழி !

சாதியென்னும் சாக்கடையைச்
சந்தனமாய் பூசிக்கொண்டு
பாதி பைத்தியமாய்
பகட்டோடு அலைகின்ற
பழைய மனிதரினம்
பகுத்தறிவு பெற்று
பண்போடு வாழச்சொல்லி
தூது செல்லடி தமிழ்த்தோழி !

பாசத்திற்கு இலக்கணமாய்
பாரில்வாழும் மங்கையரை
போகப்பொருளாய் எண்ணாமல்
புகைக்குள் தள்ளி கொல்லாமல்
நல்லக்கல்வி நாளும்தந்து
நாடாளும் வாய்ப்புதந்து
ஆணுக்கு நிகராக
அனைத்திலும் வாய்ப்பளிக்கும்
அறத்தினை வலுவூட்டி
தூது செல்லடி தமிழ்த்தோழி !

ஏழையின் உழைப்பையெல்லாம்
எக்கச்சக்கமாய் ஏமாற்றி
வயிற்றுப் பசிக்காக
வாடித்தெருவில் நிற்கையிலே
சீரும் சிறப்போடும்
செல்வ செழிப்போடும்
மாட மாளிகையில்
மனிதமற்று வாழ்கின்ற
ஆடம்பர ஆட்களெல்லாம்
அநியாயம் துறந்து
அறவாழ்வை மணந்து வாழ
தூது செல்லடி தமிழ்த்தோழி !

செயற்கை செழிப்பாக
இயற்கை இறப்பாக
எழிலார்ந்த உலகத்தை
எமலோகம் ஆக்கி
மரங்களை வெட்டி
பறவைகள் அழித்து
மருந்துகள் தெளித்து
மண்ணை மலடாக்கி
மனிதனைப் பிணமாக்கி
சாவில் சம்பாதிக்கும்
சந்தர்ப்பவாதம் அழிய
தூது செல்லடி தமிழ்த்தோழி !

காலை விடிந்தவுடன்
கடைத்தெருவைத் தேடி ஓடி
முகத்தைக் கழுவாமல்
முழுபாட்டில் சரக்கடித்து

தன் நினைவு இல்லாமல்
தள்ளாட்டம் போட்டு
வீதியில் தளர்ந்து வீழும்
வீணான மனிதர்க்கு
நன்மைதீமை எடுத்துச்சொல்லி
நல்லவழி காட்டிடவே
தூது செல்லடி தமிழ்த்தோழி !

கரைவேட்டி கதர்சட்டை
கவனமெல்லாம் கட்சிப்பதவி
வருமானம் எவ்வளவு?
வெகுமானம் எவ்வளவு?
எவன்காலை இழுத்துவிட்டு
ஏறவேண்டும் நாற்காலி
ஏறிமேலே சென்றதுமே
எட்டிவுதை ஏணிப்படி
சுயநலப் பேயாளும்
சுரணையற்ற அரசியலை
தூயதாக்கும் வழிக்கூறி
தூது செல்லடி தமிழ்த்தோழி !

பேதமில்லா நீதிவேண்டும்
பேதைமைகள் நீங்கவேண்டும்
தீய எண்ணம் மாறவேண்டும்
தீராப்பசி தீரவேண்டும்
ஏற்றத்தாழ்வு ஒழியவேண்டும்
எங்கும் ஒற்றுமை நிலவேண்டும்
அறியாமை அகலவேண்டும்
அறிவுச்சுடர் ஒளிரவேண்டும்
விஞ்ஞானம் வளரவேண்டும்
வியாபாரம் பெருகவேண்டும்
பெற்றோரைப் பேணவேண்டும்
பேராசை தவிர்க்கவேண்டும்
சுற்றம்சூழ வாழவேண்டும்
சுயமரியாதை என்றும் வேண்டும்
தன்னிகரில்லாப் புகழோடு
தரணியெல்லாம் போற்றிடவே
தமிழ்நாடு ஓங்கிடவே
தகுந்த யோசனையைத்
துணிந்த மொழியாலே
தூது சொல்லடி தமிழ்த்தோழி!

## எத்திசையும் தமிழ் மணக்க!

தென்னிந்திய தாய்மொழி
தெய்வீகப் பண்மொழி
பண்பினிய தொன்மொழி
பாமரரின் வாய்மொழி
எத்திசையும் புகழ்மணக்க
ஏற்றங்கண்ட கோமொழி

ஒன்றுபடும் ஊர்மொழி
வென்றுவரும் போர்மொழி
விழாக்கால தேர்மொழி
துலாக்கோல் நேர்மொழி

உயர்ந்த அறங்களும்
ஒப்பற்ற ஒழுக்கமும்
நிறைந்த நேர்மையும்
நிலைத்த புகழும்
நிரந்தரமாய் வாய்க்க
நினைவில் கபடம் நீக்கி
நிஜமாய் கடமை ஆற்றும்
காலம் வென்ற கன்னிமொழி
சோழம் ஆண்ட பொன்னிமொழி

உலகம் வியந்து பார்க்க
இமயம் நிமிர்ந்து நோக்க
வான்தாண்டி வளர்ந்திடும்
அகத்திய உயர்மொழி
தொல்காப்பிய தனிமொழி

எட்டுத்தொகையில் எழுச்சிப்பெற்று
பத்துப்பாட்டில் மலர்ச்சியுற்று

களப்பிரரை வீழ்த்தி வாழும்
சிற்றிலக்கிய செம்மொழி
சீர்திருத்த வன்மொழி

பொதிகையின் தொன்மொழி
பொறுமையின் மென்மொழி
காதலின் அன்மொழி
காவிய இன்மொழி
எம்மொழி ஏர்மொழி
பார்வணங்கும் தூய்மொழி!

—

பொன். தெய்வா,
ஐவேலி.



---

# பேரன்பு

அடிக்கடி உன்னை
தொலைத்து விடுகிறேன்
தேடிப் பிடித்து என்னை
தேற்றி விடு.

அடிக்கடி உன்னிடம்
கோபபப்படுகிறேன்
தலைக்கோதி
அரவணைத்து விடு.

அடிக்கடி உன்னிடம்
விளையாடுகிறேன்
தோழமையுடன் கைகோர்த்து
தோல் சாய்ந்து விடு

அடிக்கடி உன்னை விட்டு
நெடுந்தொலைவு பயணிக்கிறேன்
வழிகாட்டி என்னை
வழிநடத்தி விடு

அடிக்கடி உனக்கு
பரிசளிக்கிறேன்
உன் நினைவுகளில்
என்னை தாலாட்டி விடு

அடிக்கடி உன் பரிசை
திருப்பி விடுகிறேன்
உன் வரவை மட்டும் எனக்கு
பரிசாக்கிவிடு

தொலைதலும் தேடுதலும்
நிராகரிப்பும் பிரிவும்
மாறி மாறி இழைந்தோடினாலும்
பிரியத்தின் சாயல் தானே

இப்பிரபஞ்சத்தில்
பெயரிடப்படாத உறவாய்
திரிந்து கொண்டே இருக்கிறது
நமது பேரன்பு

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 6380704001



# உந்தன் நினைவு

ஏனோ வெற்று வானத்தை
தினம் காரணமில்லாமல்
உற்றுபார்க்கிறேன்!

உன் பிம்பம் தெரியவே
வெட்கத்தில் நான் தலை கவிழ்கிறேன்!

சுற்றித் திரியும் காற்றிடம்
ஏனோ உன் சுவாசத்தை கேட்டு
நான் வாங்க முயல்கிறேன்!

என்னைவிட்டு நெடுந்தூரம் நீயிருக்க
நித்திரையில் உன்னை பார்க்க
ஏனோ சீக்கிரம் உறக்கத்தை
நான் துணைக்கு அழைக்கிறேன்!

விடியும் நாளை நான் வெறுக்கிறேன்
விடிந்த பின்பும் உன் நினைவோடு
நான் நித்தமும் தவிக்கிறேன்!


உரிமையுடன் உன்னிடம்
பேசும்போதெல்லாம்
நீ எனக்கு உரிமையானவன் என எண்ணி
கொள்கிறேன்!

உன் நினைவுவை உயிர்பித்து கொண்டே
இருப்பேன்
நீ பிரிந்து சென்றாலும்
உன் நினைவோடு என்றும் இருப்பேன்!

பிரிவு ஒன்று நேருமேன்றாலும்
உன் நினைவோடு இறந்துவிடவும்
ஆசைப்படுகிறேன்!

—

க. பூமணி,
சென்னை.



ஓவியம்:
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# ஒப்பனைக் கால வரையறை

வருடமொருமுறை உலாவரும்
கடவுளுக்கு
தன்னையே காணிக்கையாக்கிறது
வெயில்
கடந்து செல்பவரெல்லாம்
நெஞ்சையும் நெற்றியையும் தொட்டு
செல்கின்றனர்
உலாவந்த கடவுளின் அசதியை மறந்து
அருள் மட்டும் போதுமென்ற பக்தியில்

சோர்ந்திருந்தாலும் சுயநலம் மறக்காமல்
பாலித்த கை இறங்காமல்
நகர்கிறது வேண்டுதலின் ஊர்தி
சிகையின் ஒப்பனை களையும் வரை.....

## விரல் நுனியில் பல வண்ணம்

குழந்தைகளெல்லாம் சிறகினைத் தேடிக்
கொண்டிருந்தனர்
பெற்றோர்களெல்லாம் குழந்தைகளை
கயிறில்லாமல் கட்டினர்
ஐந்து விரல்களுக்குள் அடங்கவில்லை
உலகம்
ஆறாவதாக முளைத்தது நிலத்தையும்
நீரினையும் அடக்கிய கோளவடிவ விதை
இறுகப்பற்றி நகர்த்ததான் இயலவில்லை
பஞ்சு நிறைந்த பிஞ்சு கரங்களுக்கு

## பெயரிடல்

அசைந்தும் அசையாமல் ஒன்றுக்கொன்று
எதிரெதிரே புன்னகைத்துக்
கொள்கின்றன இரு சிலைகள்
ஒன்றிற்கு கடவுளென்றும்
மற்றொன்றிற்கு குழந்தையென்றும்
பெயர்

## அடிக்கடி கடந்து செல்லும் வழியில்

குழந்தைகளின் விளையாட்டுக்குரல்
இரண்டு கைகளும்
வெறுமெனத்தான் கடக்கிறது இன்று
வரை
மழலைகளின் குரலில் வடிந்த கண்ணீர்
பாடலுடன்..

## வணங்கான்

சாலையின் முச்சந்தியில்
ஒரே வண்ணத்தில் வர்ணமிட்டு
சாலையின்
ஒருபக்கத்தில் கையில் அறிவாளும்,
மற்றொரு பக்கத்தில்
தாடி தழுவ தடியையும்
கொண்ட சிலைகளை வணங்குவது தான்
கடினமாகிப் போனது சாமான்யனுக்கு

## குவியல்

அவளுக்கு அப்பொழுது பதினாறு
வயதிருக்கும்
கருப்பு டாப்சட்டை அணிந்ததால்
என்னவோ அவள் கண் பூனையிடம்
கண்களை கடன் வாங்கி விட்டது
பச்சையம்மாளெனவே
அனைவரும் அழைப்பர்
அவள் சாயலைப் பெற்றதாலோ
அம்மையென்றே இவளழைப்பாள்
சாக்கெட் போட இயலாமல்
துவண்டுப் போன மார்பகத்துடன்
குத்தவைத்து அமர்ந்திருப்பாள்

மகளின் வாசல் மூலையிலே
ஒருமுழம் மண் குவித்து
பொத்தென பற்றிய
பேரப்பிள்ளைகளின் பத்து விரல்களில்
சிக்கிக் கொண்டது
பதினாறில் மாமனுடன் ஆடிய
கிச்சு கிச்சு தாம்புலத்தின் ஆசைக்குச்சி

## அறியாமை

இல்லாதவன் கையில் இருக்கும்
ஒவ்வொரு நாளின் தேவையானது
என்னவென்றே தெரியாது
கூட்டினை வலுப்படுத்தவோ
குஞ்சிகளின் பசி தீர்க்கவோ
ஆணுறையை தூக்கிச் செல்லும்
குருவியின் மனநிலைப் போல

## அருகாமையில்

அருகில் யார் யாரோ நின்று
கொண்டிருக்கலாம்
தூரத்தில்
உங்கள் மௌனத்தை மொத்தமும்
அபகரித்ததுபோல் ஒருவன்
வாய் கிழிய பேசிக் கொண்டிருக்கலாம்
கடந்து செல்பவரில்
யாரோ ஒருவர் ஏன் இந்த மௌனமென
வினவியிருக்கலாம்
அருகில் மட்டும் அருகாமையென
மாறும் பொழுது கொஞ்சம்
வேகமெடுத்து
முனுமுனுக்கத் தொடங்குகிறது மௌனம்
பத்து விரல்களையும் சேர்த்து மூடிக்
கொள்ளுங்கள்
உங்களையறியாமல் மௌனம்
வீசியெறியப்பட்டுவிடும் தகாத
வார்த்தைகளாய்...!

9. விரக்தி நிறைந்த உள்ளங்களுக்காக
ஒரு மரமும்
தொட்டிலும் காத்திருக்கிறது
கண்ணீர்த்துளிகளை துடைத்துவிட்டு
சற்றமர்ந்து இளைப்பாறி செல்லதான்
எதிர்பார்க்கிறது
விரக்தியின் வேர்கள்...

## மத்தியம்

நடுமத்தியாக
நீட்டிவிடப்பட்ட சாலை
இங்கொரு
கரும்புசாறு கடை
அங்கொரு தேநீர் கடை
இருகடைகளுக்கும் இடையே
இனிப்புதனை பரிமாற்றிக் கொள்கிறது
தேநீர் கடைகாரனின் தாகமும்
கரும்புசாறு கடைகாரனின் தேநீர்
மோகமும்
நீட்டிவிடப்பட்ட சாலையை
கடக்கிறது
நாவினில் படர்ந்த இனிப்புச்சுவை
மனிதரின் வடிவில்....

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



# எல்லாம் ஒரு விளம்பரம் தான்

எந்தப் பொருளை பார்க்கிறோமோ.. எந்த இணையதளத்தை மேய்கிறோமோ... எந்த பெயரைத் தேடுகிறோமோ... அது அடுத்தடுத்த முறையில் நம் கணிப்பொறி / அலைபேசி திரையில் அதுவாகவே வந்து வந்து விழும். நாம் யோசித்திருப்போம். என்ன இது... ஒரு முறை செருப்பு தேடியதற்கு ஒவ்வொரு முறையும் செருப்பா காட்டுது என்று. ஒரு வாட்டி தான் கைக்கடிகாரத்தை தேடினோம். விடிஞ்சா வந்து முன்னால நிக்குதே எப்பிடின்னு.

"இந்த விளம்பரத்தை போட்டுக்கிட்டே இருக்கறானுங்க. ஒரு நாடகம் பாக்க முடியுதா... ஒரு படத்தை பாத்து முடிக்கறதுக்குள்ள இத்தனை விளம்பரமா..?!" என்று முனங்கிய காலம் உண்டு. இப்போது ஓரளவு புரிந்து கொண்டோம். அவர்கள் விளம்பரத்தை காட்டுவதற்கு தான் சினிமாவோ நாடகமோ... இன்னபிற நிகழ்ச்சியோ கொஞ்ச நேரத்துக்கு காட்டுகிறார்கள்.

அப்படித் தான்.. இணையமும். இணையம் மட்டும் அல்ல. இவ்வுலகத்தின் மூலை முடிச்சுகள் எல்லாமே விளம்பரத்தின் வழியே நிறுவப் பட்டவைகள் தான். இந்த உலகம் முன்பிருந்த உலகத்தில் இருந்து வேறொன்றாக மாறியதற்கு காரணம் வியாபாரம். வியாபாரத்தின் மிக முக்கிய யுக்தி விளம்பரம். கூடையில் கீரையை வைத்துக் கொண்டு கீரே... கீரே... என்று கீரக்கார பாட்டி கத்தியது தான் முதல் விளம்பரம். விளம்பரமின்றி பொருளோ பிரபலமோ மக்களை சென்றடைவது எப்படி. பொருளோ பிக் பாசோ.... எது ஒன்றும் மக்கள் இன்றி ஒன்றுமில்லை. இதோ எழுதி குவிக்கிறேனே. வாசகர்கள் இல்லை என்றால் எல்லாம் வீண். எழுதியதை அவ்வப்போது தெரிந்தவர்களுக்கு அனுப்பி வைக்கிறேனோ. ஏதாவது சைட்டில் பதிந்தால் அந்த லிங்கை அனுப்புகிறேனே.... அது தான் விளம்பரம். அப்படி விளம்பரங்களே இந்த உலகத்தை சுழற்றுகின்றன என்றால் ஆம் என்று தான் சொல்ல வேண்டும்.

ஒரு நாளின் கணையம் இணையமாகவே ஆகி விட்ட காலமிது.

இணையம் வந்த பிறகு இன்னொரு உலகம் தொடங்கியது.

அதிலும் விளம்பரம் தான் முதல் பங்கு வகிக்கிறது. இம்முறை இன்னும் கொஞ்சம் அதிகமான நுட்பத்தோடு அது இயங்குகிறது. யார் யார் என்ன பொருள் பார்க்கிறார்கள்.. எந்த சினிமாவுக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்.. எந்த உணவை விரும்பி சாப்பிடுகிறார்கள்.. எந்த நிறத்தில் அடிக்கடி ஆடை உடுத்துகிறார்கள்... யாருக்கு என்ன மாதிரி ஆடை வடிவம் தேவைப்படுகிறது... விரும்பி எந்த போன் உபயோக படுத்துகிறார்கள்.. எந்த கணிப்பொறி தேவையாய் இருக்கிறது... என்ன சரக்கு குடிக்கிறார்கள்... எந்த உணவகத்துக்கு

முக்கியத்துவம் தருகிறார்கள்... என்று கண்காணித்துக் கொண்டே இருக்கிறது ஒரு சிஸ்டம். அதற்கு நாமே வழி கோலாகவும் இருக்கிறோம். முகநூல்... டிவிட்டர்.... யூடியூப் என்று சமூக ஊடகங்களில் நாம் போடும் நிலைகள்... செய்தி துணுக்கு... படங்கள் என்று... நாமே நமக்கு தெரியாமல் ஆங்காங்கே தரும் தரவுகளை அந்த சூத்திரம் அதற்கு தேவையான விதத்தில் எடுத்துக் கொள்கிறது. நாம் தான் அந்த சூத்திரத்திற்கான தரவுகள்.

எங்கோ ஒரு புத்தக கண்காட்சியில் நம் அலைபேசி எண்ணைக் கொடுத்திருப்போம். அதன் பிறகு ஒவ்வொரு புத்தக கண்காட்சிக்கு... அது தொடர்பான எந்த ஒரு நிகழ்வுக்கும் நமக்கு அழைப்பு வரும். கார் வாஷ் பண்ண விட்டிருப்போம். அதன் பிறகு கார் வாஷ் தொடர்பான அனைத்து ஆபர்களுக்கும் நமக்கு அழைப்பு வரும். ஒரு முறை போன் வாங்கும் போது போன் நம்பர் கொடுத்திருப்போம். புது மாடல் போன் வரும் போதெல்லாம் நமக்கு செய்தி வந்து கொண்டிருக்கும்.

பிடிச்ச கடை.. பிடிச்ச இனிப்பு.. பிடிச்ச உணவு.. பிடிச்ச நிறம்.. பிடிச்ச கைக்கடிகார நிறுவனம் என்று எங்கெல்லாம் ஒரு முறை நாம் விசிட் அடித்திருக்கிறோமோ அங்கெல்லாம் நாம் டேட்டா ஆகிவிடுவோம். நாம் தான் அவர்களின் முதலீடு. முகநூல்காரன் ஏன் நம்மை எப்போதும் முகநூலிலேயே அமர செய்திருக்கிறான். அது காசில்லை. சும்மா என்பதால் தானே நாமும் அமர்ந்திருக்கிறோம். சும்மா ஒரு ஆப்பை உருவாக்கி சும்மா விட்டு தனக்கு தானே ஆப்பு வைத்துக் கொள்ள அவன் என்ன வெற்று அகப்பையா. விளம்பரம்மா.. விளம்பரம்.

ஒருமுறை ஒரு மருத்துவமனைக்கு போய் விட்டு வந்து விடுங்கள். பிறகு வாரம் ஒரு குறுஞ்செய்தி வந்து கொண்டே இருக்கும். உடல் முழுக்க சோதனைக்கு இவ்ளோ. பாதிக்கு இவ்ளோ. கண்ணுக்கு மட்டும் இது சிறப்பு முகாம். நெத்திக்கு மட்டும் இது என்று எத்தனை குறுக்கு செய்திகள். காரணம் நீங்கள் அந்த மருத்துவமனைக்கு டேட்டா ஆகி விட்ட ர்கள்.

இது இங்க இருக்கு. நீங்க அங்க போங்க. இவனுக்கு இது பிடிக்கும்னு நான் கண்டுபிடிச்சிட்டேன். இந்தா இவ்ளோ குடுத்து இந்த டேட்டாஸ் வாங்கிக்கோ. அவன் முன்னால் போய் சட்டுனு அவனுக்கு புடிச்ச நீல சட்டய காட்டு. அவன்கிட்ட பத்து நீல சட்ட இருந்தாலும்.. பதினொன்னாவதா வாங்குவான். அதுவும்... கிறிஸ்துமஸ் மாசத்துல கண்டிப்பா வாங்குவான்... என்று அவர்களுக்கு தெரியும். காரணம்.. நீலத்தை பத்தி ஒரு ரைட் அப்பே எழுதி இருப்பான். நீல நீலமா போட்டோ புடிச்சு போட்டுட்டே இருந்திருப்பான். டேட்டா ஆகிட்டான்.

*AI* - ஆர்டிபிசியால் இன்டெலிஜெண்ட்... கண்காணித்துக் கொண்டே இருக்கும்.

புது உணவகம் திறந்தால்.... அவன் ஃபுட்டி என்று தெரிந்திருப்பதால் முன்னால் வந்து நிற்க

தான் செய்யும்.

நான் யூடியூப் வந்தாலே.... "என்னைத் தொட்டு அள்ளிக்கொண்ட" பாடல் பார்ப்பேன் என்று அவனுக்கு தெரியும். தொடர்ந்து பார்த்து பார்த்து... எனக்கு பிடித்த பட்டியல் அவனிடம் தானாகவே உருவாகி விட்டது. இது முடிந்து இதுதான் பார்ப்பான் என்று அவனாகவே அடுத்த பாடலை தள்ளி விடுவான். அதற்கிடையே திரைப்படம் தொடர்பான விளம்பரங்களை போட்டு விடுவான். நான் திரைதுரைக்காரன் என்று எப்போதோ கண்டு பிடித்திருப்பான். நாம் தேடி தேடி படம் பார்ப்பது... படம் தொடர்பான கட்டுரை படிப்பது... திரைப்பட விமர்சனம் எழுதுவது என்று நாம் செய்து கொண்டிருக்கும் வேலைகளின் வழியே... நாம் யார் என்று கண்டுணர்ந்து சரியாக கண் முன் கொண்டு வந்து நிறுத்துவான். மாதம் ஒரு முறை எங்காவது மலை ஏறுவேன் என்று அறிந்து கொண்டான். சரியா வீக் எண்ட் வந்து விட்டால்.. கொல்லி மலை.... குடுகு மலை... ஏற்காடு... ஊட்டி...வால்பாறை... மூணாறு... என்று அங்கிருக்கும்... ஹோட்டல்களை பரிந்துரைக்கிறான்.

இதெல்லாம் ஓரளவுக்கு நாம் அறிந்ததே.

சமீபத்தில் நான் புரிந்து கொண்டது... நான் தேடிய இடம்.. பொருள் சைட்.. அதெல்லாம் அடுத்த முறை முன் வந்து நிற்பது சரி. ஆனால் மனதுக்குள் நினைப்பது வந்து நிற்கிறதே எப்படி.

இந்த பாட்டு பாக்கணும் என்று யோசிக்கையில் அந்த பாட்டு வந்து நிற்கிறது.

இந்த நேரத்தில் இதை தான் செய்வான் என்று ஒரு தரவுகள் தயார் செய்திருக்கும். தொடர் கண்காணிப்பில் இந்த நாளில் இந்த மாதிரி இடங்களுக்குத்தான் செல்வான் என்று ஒரு லிஸ்ட் எடுத்திருக்கும். இந்த நாட்களில் இதை தான் சாப்பிடுவான் என்று ஒரு வரிசை பிடித்திருக்கும். எல்லாமே நாம் கொடுக்கும் தரவுகளில் இருந்து தான். அப்படி பல நாள் ஒத்திகை பார்த்து... ஒரு நாள் நமக்கு பொருந்தி போகும் போது நம் கவனம் அதன் மீது விழுகிறது. இப்படித் தான் புரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது. இல்லையென்றால்... இன்னைக்கு புது சட்டை எடுக்கணும் என்று யோசித்த அன்று எப்படி முக்கியமான துணி கடைகளின் விளம்பரம் கண் முன்னே வருகிறது. ஒவ்வொரு நிகழ்வுக்கும் புது சட்டை தான் நான் போடுவேன் என்று ஏதோ ஒரு பதிவில் எழுதி இருக்க வேண்டும். அந்த நாளின் ஒளிப்படங்களை பதிவேற்றி இருக்க வேண்டும். இந்த வாரம் நிகழ்வென்று மீண்டும் எங்கோ என் பதிவு தகவல் தந்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் இணைத்து... இன்னைக்கு துணி எடுப்பான் என்று முடிவெடுத்து.. அவர்கள் விளம்பரங்களுக்கு உட்பட்ட கடைகளை கொண்டு வந்து சரியாக முன் நிறுத்தி இருக்க வேண்டும். அது தான் நடக்கிறது.

இப்படித்தான் ஒவ்வொருவரின் செயல்பாடுகளையும் தொடர்ந்து கண்காணித்து அவர்களின் செயல்களை மட்டுமல்ல...மனவோட்டத்தையும் தீர்மானிக்கிறது போல.

*AI* - ஒரு மாயாவி. முகம் இல்லா முகமூடி. அது தொடர்ந்து நம்மை கண்காணிக்கிறது. ஒரு மாதத்தில் நாம் எங்கெல்லாம் சென்றோம் என்ற விபரங்கள் அதனிடம் இருக்கிறது. நாம் யாருக்கு நண்பர்கள்... யாருக்கு எண்கள் என்று அதற்கு தெரியும். இளையராஜா இசைக்கு தான் முன்னுரிமை தருகிறோம் என்று புரிந்து கொண்டு அவரின் சிறந்த பாடல்களை நம் கண் முன்னால் காட்டி இடையிடையே நமக்கு பிடித்த பொருள்களின் விளம்பரங்களை போட்டு நம்மை எப்போதும் ஒரு வாடிக்கையாளனாகவே வைத்திருக்க உதவும் இந்த *AI* - வியாபாரிகளின் காயகல்பம்.

இந்த நேரத்துக்கு இதை தான் யோசிப்பான் என்பது வரை யோசிக்கிறது. வார கடைசியில் மனம் தோய்வடையும். அப்போது அவன் இந்த மாதிரி வேலைகளை தான் செய்வான். இந்த மாதிரி புத்துணர்ச்சியை தான் தேடி போவான் என்பது வரை கண்டறிந்து விட்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியில்.. டல்லடிக்கு பதிலடி என்னவாக இருக்க வேண்டும் நாம் நினைக்கிறோமோ அதை நம் கண் முன்னால் காட்டி நம்மை அசைத்து விடுகிறது. அசத்தியும் விடுகிறது.

உன் கடை விளம்பரத்தை நான் காட்டி ஆட்களை வாடிக்கையாளனா அனுப்பறேன். எனக்கு எவ்ளோ தருவ. என்பது தான் ஊடக வியாபாரம். நம்மை ஈர்க்க... நம்மை சோம்பேறியாக்கி... அவன் பொறியில் சிக்க வைக்க... பொழுதுபோக்கு ஆயுதமாக வந்து நம் தலை மேல் விடிந்திருக்கும் முகநூல் போன்ற முழு பூசணிகளை நாம் ஒருபோதும் உடைக்க மாட்டோம் என்று அவர்கள் அறிவார்கள். அதற்கான சன்மானமாக நமக்கு ஐந்தாயிரம் நண்பர்களை தந்திருக்கிறார்கள். நாள் முழுக்க அழுது புலம்ப.. வெத்து கெத்து பேச... போலி புகழில் மயங்க... வசதி செய்திருக்கிறார்கள். இவைகளைத் தாண்டி நாமும் புத்தி இருந்தால்... பயன்படுத்திக் கொள்ளலாம். அதே விளம்பர யுக்திக்கு மட்டும் பயன்படுத்தி... தப்பித்துக் கொள்வோரும் உண்டு. முழுநேர சம்பளமில்லா பணியாளராக சிக்கிக் கொண்டோரும் உண்டு.

முடி வெட்டும் கடைக்கு எப்போதும் வேலை இருக்கும். வெட்ட வெட்ட முளைக்கும் மனிதர்கள் நாம். அப்படி... மனிதர்களே பொருட்கள் தான். பொருட்களிடம் பொருட்களை கொடுத்து பண்டமாற்றம் செய்வதை தான் நாகரீக கோமாளித்தனம் செய்து கொண்டிருக்கிறது. இயற்கையிலே கேளிக்கை விரும்பி மனிதன். அவன் மிக சுலபமாக இச்சைக்கு அடிமையாவான். ஆசைக்கும் பேராசைக்கும் இடையே அவன் மாதம் ஒரு போன் வைத்துக் கொள்வதை கூட விரும்புவான். அதைத் தொட்டு *AI* -ன் சித்து போன் விரும்பிகள் நினைத்த நேரத்தில் புது போனை அவன் கண் முன் கொண்டு வந்து மினுக்கும்.

அதுவும் உலகத்தில் மிகப் பெரிய சந்தை இந்தியா. நுகர்வோர் கலாச்சாரம் நூல் இடைவெளி இன்றி தொடர்ந்து கொண்டிருக்கும் இடம் இது. அதுவும்... ஒரு நிலையுடன் உடன் பொருத்தி பார்த்துக் கொள்ளும் இடத்திலும் இந்த நுகர்வு கலாச்சாரம் இருக்கிறது. திருடன் கையில் சாவியைக் கொடுத்த மாதிரி.... எண்ணங்களை... விருப்பங்களை எல்லாம் *AI* - இடம் கொடுத்து விட்டு சும்மா இருந்தால் விடுவானா. மரம் சும்மா இருந்தாலும் காற்று விடுவதாயில்லை.. விற்கும் அவனுக்கும் பொருந்தும்.

யார் சும்மா இருந்தாலும்... சந்தையில புது இருசக்கர வாகனம் வந்திருக்கும். இருசக்கர வாகன ஓட்டுநர் யார் என்று தெரிந்து வைத்திருப்பான். அலைபேசி முகநூல் என்று திரை இருக்கும் இடமெல்லாம் முன் சென்று பல் இளிப்பான். ஒரு குட்டைப்பாவாடைக்காரி காற்றில் பறக்க பைக்கை காதலித்துக் கொண்டிருப்பாள். ஏற்கனவே ஆசை ஊறிப்போன இவன் விடுவானா. கடனை உடனை வாங்கி பேஷனை நிறைவேற்றத்தான் பார்ப்பான். அது தான் அவனுக்கு வேண்டும். அதற்கு தான் குடை மிளகாயில் இருந்து கோடி ஆடி வரை வந்து வந்து மூஞ்சை காட்டிக்கொண்டு நிற்கிறான்.

முன்ன மாதிரி காது கேக்க மாட்டேங்குது.. கண்ணும் தெரிய மாட்டேங்குது என்று அலைபேசியில் என்னோடு ஆத்தா பேசிய அன்றே கண் கண்ணாடி விளம்பரமும்... காது கேட்கும் கருவி விளம்பரமும் என் கணிப்பொறி திரையில் வருவது எப்படி. ஒரு நாள் வீதி பையன் இருசக்கர வாகனத்தில் போகும் போது மாடு மோதி விழுந்துட்டேன்னு சொன்னான். அன்று இரவு *Instagram* போனா.. மாடு... நாய்.... மானுன்னு.... மிருகங்கள் வந்து வந்து வண்டில மோதுகிற காணொலியா வருது. எப்படி.

முன்பெல்லாம் நாம் என்ன தேடுகிறோம் என்பதை வைத்து வந்து நின்றான். இப்போது நாம் எப்போது தேட நினைக்கிறோம் என்பதையும் கண்டறிந்து வந்து நிற்கிறான். என்ன செய்வது... நம்மை விற்று பொருளோ... புகழோ... பெயரோ... அந்தஸ்தோ வாங்கி வீட்டுக்குள் குவிக்கும் மக்கிய எண்ணம் இருக்கும் வரை.. ஒன்றும் செய்ய இயலாது.

எதை தேடுகிறேனோ அது முன் வந்து நின்றதில் இருந்து... என்ன தேட வேண்டும் என்று நினைக்கிறேனோ அதுவே வந்து நின்றதில் தான் இந்தப் பதிவு இந்தத் தலைப்பில் தன்னை விளம்பரப் படுத்திக் கொண்டிருக்கிறது.

ஒரு படத்தில் கவுண்டமணியிடம் செந்தில்.... "எல்லாம் ஒரு விளம்பரம் தான்" என்று கேலி செய்வார். அது நகைசுவை இல்லை. அது தான் வியாபார உலகின் அடிப்படை. எல்லாமே விளம்பரம் தான்.

— கவிஜி

# சித்திரை திருநாள்.!

ஆதவன் அனல் கக்க...
அறியாமை எரிந்து
ஆற்றலை பெருக்கும்
சித்திரை திருநாள்....!

அயரா உழைப்பே ...
உயர்வு தரும்
என்ற தமிழரின்
நம்பிக்கையை
உண்மையாக்கும்
இன்பத் திருநாள்......!

நாணத்தால் வெட்கி..
புன்சிரிப்போடு தலைகுனியும்
தமிழ்ப் பெண் போல்..
மகிழ்ச்சி எங்கெங்கும்..
பூக்கும் திருநாள்.....!

அநீதியும், அவநம்பிக்கையும்...
பொய்யும் புரட்டும்...
நிஜமும்,நிழலும்....
அறியாமையும் ,விழிப்புணர்வும்....
பகுத்து அறியும் தன்மை தரும்...
என்ற -
நம்பிக்கையோடு ...
சித்திரை திருநாளை
வரவேற்போம் ...
ஏனெனில் -
அதுவே நம் பண்பாடு ..!?

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



---

# அடர்ந்த இருட்டு ஒளிரும்

மின்னொளியாய் நிலவொளி
இவற்றுக்கிடையே
பாலைவன மணலில்
ஆயிரம் காலடித்தடங்கள்
ஒவ்வொரு காலடித்தடங்களும்
ஒவ்வொரு வாழ்வியல்
விழுமியங்களை உணர்த்துகிறது
அது புரியாத
மனிதனும் வியப்புடன்
பார்க்கிறான்
எந்த காலடி தடத்தில்
தன்னை பொருத்திக்
கொள்வதென்று ஒரே
நேர் கோட்டில் பதிந்து
இரண்டு தடங்களில்
தன்னை பொருத்திக்
கொள்ள முயல்கிறான்....



—

ச. சத்தியபானு

# எறிந்த கற்கள்

அந்தக் கவிதைக்குள்
உனக்கான முத்தங்களை
மறைத்து வைத்திருக்கிறேன்.
இலைமறைக் காயாய்
இருக்கின்ற ரகசிய
முத்தங்களைக் கல்லெறிந்து
பறித்துச் சுவைக்க
விழைகிறாய்.

நீ எறிந்த கற்கள்
குறி தவறி பதம் பார்க்கிறது
கவிதையின் வரிகளை.
மீண்டும் மீண்டும் கல்லெறிந்து
அக்கவிதை எங்கும்
ரணமாக்குகிறாய்.

உன் கல்லெறிதலுக்குத்
தப்பித்த முத்தங்கள்
உன் பட்டுக்
கன்னங்களை வருடவும்
உன் கோவைக்
கனியிதழ்களைச் சுவைக்கவும்
காத்திருக்கின்றன
என்பதை இன்னும்
அறியாமலே இருக்கிறாய்.

## நிலாச்சோறு

சின்னவன் கோபிக்கு
பால்சோறு பிரியம்னு
அவனுக்கு ஊட்டிட்டா
அம்மா.
பெரியவன் விசுவுக்கு
தோசைன்னா விருப்பமென்று
அவனுக்கும் ரெண்டு
தின்னக் குடுத்துட்டா
அம்மா.

மக ராதாவோ
பழைய சோறுன்னாக் கூட
எவர்சில்வர் தட்ல தான்
சாப்பிடுவேன்னு
அடம்புடிப்பா
அவளும்
சாப்பிட்டு முடிச்சிட்டா.

பிள்ளைங்க
நிலவை உண்டுகளித்த
மகிழ்வில்
அவங்கள
விளையாட அனுப்பிட்டா
அம்மாவும்.

பானை நீரில்
மிதக்கும் நிலவை
அள்ளிக் குடித்துவிட்டு
நிலவுக்கு
நன்றி சொல்ல
வான்நோக்கிப் பார்க்கிறாள்
அம்மா.

கொஞ்சமும் குறையாமல்
வட்டநிலா வானத்தில்
முழுமையாய்
இருக்கக் கண்டு
மயங்கி விழுகிறாள்
அம்மா பொன்னம்மா.

தெருவில்
விளையாடிக் கொண்டிருக்கும்
அவள் பிள்ளைகளும்

நிற்கவும் திராணியற்று
ஒவ்வொருவராய்
தரையில் சரிகிறார்கள்...

## நிர்ப்பந்தம்

நிர்ப்பந்தமொன்று
இறுக்கிப் பிடித்திருக்கிறது
என்னை.
அது - நிர்ப்பந்தத்திற்குத்
தெரியுமோ தெரியாதோ
அது - எனக்குத் தெரியாது.

என்னிடம் -
சிக்கியிருப்பது குறித்து
நிர்ப்பந்தம் உங்களிடம்
முறையிட்டிருக்கலாம்
முறையிடாமலுமிருக்கலாம்
அதுவும் -
எனக்குத் தெரியாது.

நிர்ப்பந்தத்தை
விட்டு நான் மெல்ல
விலகினாலும்
அது- என்னிடமிருந்து அதன்
பெருமுடிச்சினை அவிழ்த்து
விடுவித்துப் போனாலும்
அத்தருணம்-
முதற்கண் நாங்களிவருமே
அவரவர் சுயபாதையில்...!

- கவிதைகள் ஆக்கம்

பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி : 9443139353



---

# மலையும் மழையும்

விம்மியழும் வானம்
தெளித்த பன்னீராய்
மழைத்துளி

சொட்டுச்சொட்டாய்
உதிர்ந்தோட அள்ளியணைத்து
முத்தமிட்டு கரம் கோர்க்கிறது
விண்ணதிரும் முகடுகள்

கார்கால பவனியில்
உன்னுடல் வியர்த்திருக்க
புதிதாய் முளைத்தெழும்
செடிகள் அலங்கரிக்கிறது
வண்ணமிட்ட கோலங்களாய்
பசுமை ஆடை உடுத்தி
வான்மேகத்தில் நீந்துகிறது

கற்களால் நெய்யப்பட்ட
உன்னுடல்கள்

மலைகளாய் செங்குத்தாய்
முளைத்தெழ நீரூற்றி
வளர்த்திடும் வான்மழையில்
தாலாட்டாய் பரிணமிக்கிறாய்

உன்மீது விழும்
என் பாதங்களை
கரங்களாய் அணைத்து
வழியமைத்து நிற்கிறாய்
வான்மழையில் ...!

நனைந்து நிற்கும்
உன்னுடலுக்குள் சிற்சிறு
குடைகளாய் புணையப்பட்ட
மரங்கள்...!

மேகங்களோடு நீ
பேசும்பொழுதெல்லாம்
உன்னுடல்கள் வியர்க்கிறது
மழையாய்...!

சின்னஞ்சிறு விரல்கள்
புனைந்த சித்திரத்தில்
பரிசுமழையில் நணைந்து
கொள்கிறாய்

அதிசயித்து நிற்கும்
உன்னை தொட்டுப்பார்க்க
என்பாதங்கள் வரம் கேட்கிறது
மலையே மழைக்குள்
முளைத்தெழுந்த காளானா நீ...!

உன் தாலாட்டில்
கண்ணயரும் பறவையினங்கள்
கூடுகட்டி வாழ்கின்றன

இயற்கை தந்த பரிசில்
பரிசிலாய் நீந்துகிறாய்
என்னுள்ளே...!

நகரங்களில் இலயிக்காமல்
நகர்ந்து நிற்கும் உன்னால் தான்
நகரங்களில் நகரும் நகரவாசிகள்
சுவாசித்து
கொள்கிறார்கள் போலும்....!

மலையில் வீழும்
மழையே..! நீ
நீர்வீழ்ச்சியாய் உருவெடுக்கையில்
என்னுள்ளும் உருவெடுக்கிறது
ஆயிரம் நீர்வீழ்ச்சிகள்
கவிரசமாய்....!

மழைக்குள் நுழைந்த
மலையே..!
வரலாறுகள் பேசும்
அதிசயம் தான் நீ...!
நானும் படம் பிடித்து
கொள்கிறேன் உன்னை
வரலாற்றில்
எழுதிக் கொள்ள....!

—

ஞா. முனிராஜ்

# பிரியா மனம் வேண்டும்

அலுவலகம் முடிந்து
வீட்டிற்கு வந்த நர்மதாவிற்கு
ஒரே அதிர்ச்சி.

அம்மாவைக் காணவில்லை.
எங்கெல்லாம் தேடியும்
கிடைக்காமல்
சோர்வுடன் வீட்டிற்கு
வந்தவளுக்கு மேலும்
அதிர்ச்சி தன் கணவருடன்
காரில் இருந்து
இறங்கும் அம்மாவைக்
கண்டு...

வயது முதிர்ந்து
பார்வைத்திறன்
குன்றிய அம்மாவைக்
கட்டிப்பிடித்து அழ
ஆரம்பித்து விட்ட
நர்மதாவை ஆறுதல்
சொல்லி கூட்டிச் சென்ற
கணவர் பிரகாஷ்
"நாம் இருவரும்
நேற்றிரவு குழந்தைப்
பேறு வேண்டாம்
அம்மாவே நமக்கு
ஒரு குழந்தைத் தானே
எனக் பேசியதைக்
கேட்டுவிட்ட அம்மா
மனமுடைந்து சென்று
விட்டதாக என்னிடம்
கூறினார். என் நண்பன்
ஒருவன் மூலம் அம்மா
இருக்குமிடம் தெரிந்து
அழைத்து வந்துள்ளேன் எனக்
கூறியதைக் கேட்டதும்
அம்மா எங்களை
மன்னித்து விடுங்கள்
இனிமேல் நீங்கள்
எங்குமே போகக்கூடாது
எனக் கூறியவளிடம்
"எனக்கு ஒரு பேரக்குழந்தையை
என் கையில் . கொடுத்தால்
நான் எங்கும் செல்ல
மாட்டேன்" என கூறிய
அம்மாவிற்கு உறுதி
அளித்தாள் நர்மதா...

ஒரு வருடம் கழித்து,
சிறு வயதில் தன் பெற்றோரை இழந்து
விட்ட
பிரகாஷ், தன் குடும்பத்துடன்
கோவிலுக்குச்
சென்று தன் செல்ல
மகளுக்கு தன் அம்மா
பெயரைச் சூட்டி
மகிழ்ந்தான்
"வேல்விழி " என...

—

மு. ஜெரோஷா,
திருப்பூர்.

# யார் சொன்னது?

உன்னால் முடியும்
என்ற வார்த்தையில்
உள்ளத்தின் நம்பிக்கை

அற்புதமான
சிறப்பான பணி
என்ற சொற்களில்
வானத்தில் பறக்கும்
மனது

இப்படி எல்லாமா
சொதப்புவே
என்ற பேச்சில்
நொறுங்கி போகும்
உள்ளம்

காலத்தே செய்த உதவிக்கு
நீ நல்லா இருப்பே
என்ற வாழ்த்தில்
நெகிழும் மனது

யார் சொன்னது
காற்றில் கரைபவன
வார்த்தைகள் என்று

## அதிகமாய்...

வெற்றிக்கான
காரணங்களை விட
தோல்விக்கான
காரணங்களுக்கான
யோசிப்பும்

கிடைத்தற்கான
சந்தோஷத்தின்
அளவை விட
இழப்புக்கான
சோகத்தின்
அளவும்

தன்னிடமுள்ளவற்றுக்கான
திருப்தியின்
கணக்கை விட
பிறரிடம் இருப்பது
பார்த்து
வரும்
ஏக்க கணக்கு
அதிகம்

மனித மனங்களில்...

## இவர்களுக்குப் பின்னல்

இலக்குகளுக்கு
மனதின் ஆசைகள்

தொடர் செயல்பாட்டுக்கு
இலக்கை அடையும்
உத்வேகம்

மகிழ்ச்சிக்கு
நினைத்தது நடந்தது
என்ற தன்னிறைவு

பேசிக்கொண்டே
இருத்தலுக்கு
தன்னை முன்னிறுத்தும்
அலட்டல்

மிகப்பெரிய
ஏமாற்றத்துக்கு
தகுதிக்கு மீறிய
எதிர்பார்ப்பு

உதவி செய்தலுக்கு
தன்னைப்போல்
பிறரை நினைக்கும்
மனிதம்

படைப்புகள்
பாராட்டப்பட
ரசிப்புத்தன்மை

கடுங்கோபத்திற்கு
இயலாமை

யோசிப்பில்
திட்டமிடல்

பிறருக்கான
பாராட்டில்
திறமை அங்கீரித்தல்

ஒப்பிட்டில்
தனக்கு கிடைக்கவில்லை
என ஏக்கம்

## எப்பொழுதுவேமா?

ஒரு தவறான பேச்சு
ஒரு சரியில்லாத செயல்பாடு
ஒரு அவசியமற்ற கோபம்
ஒரு நிகழ்வில் புதுப்பிப்பது இல்லாது

என்பதை வைத்து
சக மனிதர் மீது
அபிப்பிராயம்
கொள்ள வேண்டாமே...

தவறாய் எண்ணம் கொண்டு
தொடர்பு கொண்டால்
தவறாய் தெரியும்

இடையில் காலம் என்ற
ஒன்று உண்டு
மாற்றம் நிகழ்ந்திருக்கலாம்

இந்த கணத்தில்
நிகழ்வுகளை
வைத்தே எடை போட வேண்டும்...

## அப்படியும் இப்படியும்

தன் தரப்பு நியாயத்தை
தெளிவாய் புரிய
வைக்கும்
எண்ணமே
இல்லாமால்
பேச்சின் ஆரம்பத்திலேயே
முடிவாய் என்ன சொல்கிறாய்

நீட்டி முழக்கி
உதாரணம் சொல்லி
அதிகம் பேசி
விளக்கி விட்டு
அதிகமாய் பேச விரும்பவில்லை

வசதிகளும்
வாய்ப்புகளும்
அதிகம் இருக்கையில்
உதவி கேட்கப்படுகையில்

உங்களுக்கு இல்லாமாலா
ஆனால் தற்போது
இயலவில்லை
என இனிப்பு தடவிய
வார்த்தைகளில்

தானே கஷ்டத்தில்
இருக்கையில்
உதவி கேட்பவர்
கஷ்டம் தன்னிலும்
அதிகம் இருப்பதால்
கேட்காமலேயே
முன்நின்று
என்னால் முடிந்தது
வைத்துகொள்

## கொஞ்சம் கொஞ்சமாய்...

பகிரப்பட்ட
செய்தியை
உண்மையா என
யோசிக்காமால்
உறுதிப்படுத்தாமால்

சொல்கையில்
கேட்கப்படும்கேள்வியான
நல்லா தெரியுமா

என்பதற்கு
முதலில்
ஆமாம்

மீண்டும் மீண்டுமான
சந்தேக கேள்விகளில்
அப்படித்தான் நினைக்கிறேன்

அடுத்தாய்
உறுதியாய் தெரியவில்லை

கடைசியாய்
கேள்விப்பட்டதை
சொல்கிறேன்

கொஞ்சம்
கொஞ்சமாய்
சுருதி குறையும்
பதில்கள்

## இதுவும் தான்...

தன் பெயர் உள்ளவரை
மற்றொருவர் அழைக்க
'திரும்பி பார்ப்பதும்'

நேரம் அறிவிக்கும் போது
'கைக்கடிகாரம் பார்ப்பதும்'

கால் தடுக்கும் போது
'அப்பா என அலறுவதும்
மட்டுமல்ல...

தனியனாய்
செயலாற்றும் போதும்
யோசிக்கும் போதும்

'இப்படி நடந்து இருக்கக்கூடாது
என்றோ

'நான் சொன்னது
சரி தானே'

என்று புத்தி சொன்னதை
உதட்டு வார்த்தையால்
முணு முணுப்பதும்

'அனிச்சை' தான்...

## உண்மையும் உணர்வுகளும்

கால இடைவெளிக்குப்பின்
உறவும்
நட்பும்
சந்திக்கும்
முதல் பார்வையில்
'உனக்கு ஆயுசு நூறு'

உரையாடலின்
தொடர்ச்சியில்
'எப்பொழுதுமே உன்
நினைப்பு தான்'

அருகாமையில் வசித்து
இரத்த உறவாய்
இல்லையெனினும்
உறவு சொல்லி அழைத்து
செய்தொழிலுக்காய்
பிரியும் கணங்களில்
'அடிக்கடி வந்து போய்
கொண்டிரு'

ஒரே ஊர்
ஒரே கல்லூரி
ஒரே வீதியில்
வசிப்பிடம்
என சுற்றிவந்த
நட்புக்கூட்டம்
பேசுகையில்
'இப்படியே
வாழ்நாள் முழுவதும்
போக வேண்டும்'

இதில்
வைத்திருக்கின்ற
பாசம்
உண்மை தான்
பிரிவின்
சோகம்
உண்மை தான்

ஆனால்
அதற்கான
உதட்டு வார்த்தைகள்
உணர்வுமயமானவை
சாத்தியமற்றவை

## இங்கே...

கேள்வியை விட
உடனடியாய்
பதிலுக்கு
முக்கியத்துவமும்

சொல்லப்படுவதை விட
சொன்னது யார்
என பார்ப்பதும்

கேள்விப்பட்டதை
உறுதி படுத்தி கொள்வதை விட
பகிரப்படுவதும்

விவாதங்களில்
கருத்துக்களை விட
நான் சரி என
நீருபிக்க முயற்சியும்

கேட்கப்பட்டதை
புரிந்து கொள்வதை
விட
அது மற்றவர்களால்
எப்படி பார்க்கப்படுவது
என்பதும்

இங்கே
அதிகம்

## வெறும் வார்த்தைகளா?

எப்படி இருக்கிறாய்
என்பதற்கு
'ஏதோ இருக்கிறேன்'

உனக்கு உதவ முடியவில்லை
என்பதற்கு
'பரவாயில்லை'

என்ன முடிவு
செய்து உள்ளாய்
என்பதற்கு
'குழப்பமாய் உள்ளது'

இந்த வேலை
செய்கிறாய் என்றாயே
என்பதற்கு
'மறந்து விட்டேன்'

உன் எதிர்பார்ப்பு
எந்த நிலையில்
என்பதற்கு
'பயமாய் இருக்கிறது'

இவை வெறும்
வார்த்தை மட்டுமா
அந்த நேரத்தின்
ஒட்டு மொத்த
உள்ளத்து
உணர்வுகளின்
வெளிப்பாடு

## உள்ளுக்குள்ளே..

பிடித்த உணவு
ரசிப்பு இல்லாமால்
இயந்திரத்தனமாய்
வாயில்

மகிழுகின்ற
நகைச்சுவை
காணொளி
வெறும் பார்வையாய்
தொலைக்காட்சி பெட்டியில்

உற்சாகம் கொடுக்கும்
திரைப்பட பாடல்கள்
வெறும் ஒலியாய்
செவிகளில்

விரும்புகின்ற
கலந்துரையாலில்
எண்ணிக்கைக்கணக்கில்

இருப்பாய் மட்டுமே

இவையெல்லாம்
உள்ளுக்குள்ளே
தீவிர சிந்தனையில்
இனம் புரியா சோகத்தில்
அதிக பதட்ட பயத்தில்
எதிர்பார்ப்பின்
ஏமாற்றத்தில்
இழந்த வேதனையில்

## காரணங்களாய்...

ஒரே மாதிரியான
வெற்றிக்கு
சந்தோஷமும்
தோல்விக்கான
வருத்தமும்
கவலைகளுக்கான
பதட்டமும்

எல்லா மனிதர்களுக்கும்
ஒரே மாதிரியானவை அல்ல...

வித விதமான காரணங்களாய்

'முதல் நிகழ்வு'
'தொடர் நிகழ்வுகள்'
'மனப்பக்குவம்'
'பட்டறிவு'
'மனத்திடம்'
'அடுத்தது என்ன என்ற சிந்தனை'...

## யோசிப்பு காலங்களில்...

பார்வையோ
மோட்டு வளையிலும்
தொலைக்காட்சி பெட்டியிலும்

மனமோ
குழந்தைகள்
தாயிடம்
உணவருந்த காட்டும்
ஆட்டம் போல்

செய்தொழில் பற்றிய
இன்றைய நிஜங்கள்
நாளைய கவலைகள்
பற்றிய எண்ண ஓட்டம்

இத்தனைக்கும் இடையில் தான்
'படைப்புகள்'
உருவாகிறது.

## இரட்டையாய்...

சொல்லுக்கும்
செயலுக்குமான
எதிர்மறை விமர்சனங்கள்
வசைமொழி
வரும் போது

பத்தாதோ
திறன் வளர்ப்பு
தேவையோ
கவனக்குவிப்பு
வேண்டுமோ
உன்னித்தல்
நடக்கவில்லையோ
புரிதல் இல்லையோ

தன் திருப்தி

இருக்கிறதே
விமர்சனம்
பாரபட்சமானதா
சூழ்நிலைகள்
கணக்கில் கொள்ளப்படவில்லையோ
அந்த கணத்து
மனநிலையாலா
கொடுத்த விளக்கங்கள்
புத்திக்கு செல்லவில்லையோ

என இரட்டையாய்
யோசிப்பு
உள்ளுக்குள்ளே
புத்தியின் வேலையால்..

## அப்ப எல்லாம்...

செய்ய வேண்டிய
பணியின்
அவசர அவசியத்தை
உணர்த்த...

வாக்குவாதத்தில்
பதில்மொழி
இல்லாமால் போகையில்...

நோயற்று இருக்கையில்
உடல் வேதனையின்
உச்சத்தில்...

அடுத்து என்ன ஆகுமோ
என்ற பயத்தில்...

வெற்றி கொடுத்த
உவகையின்
துள்ளலில்...

மனதின் குரலாய்

'சொன்னதையே
சொல்லும் உதடுகள்

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை,
கைப்பேசி: **9994920236**



# தண்ணீரும் தமிழும்

தண்ணீரும் தேன் தமிழும் ஒன்றாகும்
பண்நீரும் தண்நீரும் கண் உண்டாகும்.

மல்லிகை சூடும் மங்கை நீர்த்துளி
சொல்லிடை ஆடும் செந்தமிழ் வளி

பயிர் காத்து பலவும் தந்தாய்
உயிர் காத்து மெய்யும் உவந்தாய்

சிந்தும் துளி ஜன்மம் காக்கும்
செந்தமிழ் மொழி மென்மை ஆக்கும்

நா நனைக்கும் தண்ணீர் ஆனாய்
பா பிறக்கும் மண்ணிலே பாராய்

ஐம்பூதங்களில் உலவுமே அமிழ்தாகிய அப்பு
ஐம்காப்பியங்களும் நிலவும் தமிழிலே செப்பு

நீராகி எங்கள் தாகம் தீர்த்தனை
காராகி  எங்கும் கவிமேக கீர்த்தனை

ஆற்றுநீரால் ஊற்று நீரால் ஊரை ஊற்றினை
போற்றினை ஆற்றுபடுத்தி பாரை தேற்றினை

—

மதீரா,
அறிவிப்பாளினி,
இலங்கை.

# காதல்

கண்களால் வசியம் செய்தாய்
உன் இடக்கண் பார்வைக்கு இடம்
கொடுத்தேன் அன்று -

உன் வலக்கண் பார்வையால்
வலைத்தணைத்தாய் எனை இன்று:

இசைக்கிறேன் என் இதழ்களில் உன் பெயரை மட்டும்
உன்னால் விடிகிறேன் தினமும்
என் ஆதவனின் முகம் காண -

உன் ஒளிக்கண் பார்வையால் கூசுவது என்
விழிகள் மட்டும் அல்ல
கூச்சலிடுகிறது என் நாணம் கூட!

— கவி,
கவிதாயினி. பார்கவி. செ, M.E(PS).
வல்லூர், மன்னார்குடி.



பூக்களை நுகர்கிறேன்
பட்டாம்பூச்சி
வாசம்.

—

ஆனந்தன்,
திருப்பூர்.



# வெள்ளை ராஜாக்கள்

இலவசமாகத் தந்ததாக
கோடி கோடியாக
விளம்பரம் செய்கிறார்கள்

குடிசைகளைக் காண
சொகுசு கார்களில்
வருகிறார்கள்
ஏழைப் பங்காளன் என
தம்பட்டம் அடிக்கிறார்கள்

கல்வி தந்தான்
தன் தலைவனென
ஒலிபெருக்கியில்
ஓயாது ஓடுகிறது பாட்டு
தேர்வு காலத்தில்...

நம் தலைகளை
அடமானம் வைக்க...
கறைகளில்லா
வெள்ளாடைகள்
கால்களிலும் விழுவார்கள்
காசும் கொடுப்பார்கள்

யார்
வென்றாலும்
ஒன்று மட்டுமே உண்மை
நீங்கள் குதிப்பது
மண்ணில் கலந்த
வ உ சி யின்
பாரதியின்
பகத்சிங்கின்
நேதாஜியின்
காந்தியின்
மார்பினில்

எங்கள்
கறைபடிந்த கைகள்
தூய்மையானது
வெள்ளை ராஜாக்களே!
குளுகுளு அறையில்
உங்கள் கைகளைத்
தொட்டுப் பாருங்கள்

உங்கள் கைகளை
சுத்தப்படுத்த
நீங்கள் உபயோகித்தது
பலரது கண்ணீரை

பணத்தில்
புரண்டுப் படுத்தாலும்
பதவி நாற்காலியில்
சுகமாக அனுபவித்தாலும்
காலத்தின்
கேள்வி அம்புகள்
உங்களைக் குத்தி
வீழ்த்தும்

—

சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
அலைபேசி: 9944315732



# உயிர்ப்பின் தேவையில் பாறையும் உருகிட

பயிரின் முட்டலென பசுமையும் விளைந்திட
மலரின் ஒளியில் முட்களும் தழைத்திட
இருப்பிடத்தை அழகாக்கும்
இதயத்தைக் கைக்கொள்க.

## எனது ஆசிரியர்

பிஞ்சின் மூளையில் பிரபஞ்சம் கூட்டி
பிறப்பின் பெருமையை கல்வியெனப் புகட்டி
சிலேட்டில் துவக்கிய ஒற்றைப்புள்ளி கொண்டு
சிந்தையை நிரப்பி உலகத்தின் சாஎரத்தை
அறிவின் வெளிச்சத்தில் திறந்துவிட்ட ஆசான்
ஒன்றுமில்லா நிலையிலிருந்து உணர்வைக் கூட்டி
நன்றென்னும் நல்லனவற்றை இதயத்தில் நிறைத்து
நாளும் பொழுதும் நிகழும் சம்பவத்தில்
குணங்கள் வளர்த்து குறிக்கோல் உயர்த்தி
வாழ்வின் பயணங்களில் கடந்திடும் பாதைகளில்
மேடு பள்ளங்களை மேவிடும் ஆற்றலை
மூளையில் பதித்து முன்னோரின் சுவடுகளில்
முகிழ்த்திடும் கனவுகளை வென்றிடும் வழிகளை
படிப்பின் சரித்திரமென பகிர்ந்திட்ட குரு
பெரியோரிடம் மரியாதை பெற்றிடும் கலைகளும்
அறியாதார் நிலைகண்டு கலங்கிடும் மனமும்
இயல்பாய் பெருகி எங்கும் நிறைந்திட
வாழ்வை போதித்த விளக்கே வாழி.

## விடியல்

கலைக்கா நினைவுகளில் முளைக்கும் எண்ணங்களில்
கலங்கா உறுதியில் நிறைக்கும் நம்பிக்கையில்
அலைச்சலில் நில்லாது அன்பினில் வளர்ந்திடும்
விடியலின் பாதையில் வெற்றிகள் நிலைத்திடும்.

## பகுத்தறிவின் பாதையில் சிந்தனை கூட்டி

வகுப்புவாதங்களில் மனிதத்தை மனதில் நிறைத்து
மகளிர் துயரங்களை உலகம் உணர்ந்திட
சகத்தினில் சாதியின் வேர்களைக் களைந்திட
புரட்சியை வாளாக்கி புதுமைகள் புகுத்தியே
துரத்திடும் தீண்டாமையை துணிந்து எதிர்த்தே
வார்த்தைகளில் நில்லாது வாழ்ந்து காட்டி
கோர்த்திடும் பழமைத்தனங்களை கூட்டி

விரட்டியே
பிறப்பால் மனிதரைப் பேதம் பிரிக்கும்
வறட்டுத்தனங்களின் வாலினைச் சுழற்றி
அடித்தே
சுயமரியாதை விதையை குருதியில் தூவி
பால்ய விவாகத்திலிருந்து பிஞ்சுகளைக்
காத்து
மொழியின் ஆளுமையை மூளையில்
இருத்தி
பிழையெனக் கிடக்கும் வேற்றுமை
நஞ்சுகளை
பேச்சிலும் எழுத்திலும் முனைந்து
அழித்தே
சமூகத்தின் போக்கை திசைமாற்றிய
சிங்கம்
சாளரமென கல்வியைப் புகுத்திட்ட
தங்கம்
வைக்கத்தில் நடந்து வக்கிரத்தைத்
துடைத்து
இயக்கத்தில் இருந்து விடுதலைக்காய்
போராடி
மூடத்தனத்தை முடக்கிப் போட
முன்னேறி
சமத்துவத்தை தேசத்தில் மலரச் செய்து
சாதித்திட முதுமையிலும் நடை நீட்டிய
ஈரோட்டுச் சிங்கத்தின் வழி நடப்போம்.

## செவிகள் திறக்கட்டும்

ஒலித்திடும் இசையில் அமைதியைத்
தேடிட
வளர்ந்திடும் அமைதியில் நிம்மதியை
நாடிட
கேட்டிடும் வார்த்தையில் கேடுகள்
நீங்கிட
ஏட்டினில் பார்த்திடும் வாய்ப்புகள்
நிறைந்திட
நல்லன விளையும் நம்பிக்கை கூடிட
அல்லன துறந்தே அவதியை விரட்டிட
பொல்லாச் சுமைகளைப் புல்லென
இழந்திட
பார்வையின் பயணத்தை திசையெங்கும்
விரித்திட
ஊக்கத்தின் துணையொடு உழைப்பைக்
காத்து
போக்கிடம் சிறந்திட புத்தியைத் தீட்டி
யாக்கையின் தேடலில் ஆனந்தம்
விளைந்திட
வாக்கும் வாழ்வும் மெய்யை உணர
விரியும் வானின் அகலத்தை வாங்கிட
கனவுகளின் கதையை காவியமாய்
மாற்றிட
கரைந்திடும் காலத்தில் சரித்திரமாய்
மாறிட
செவிகளை விரித்து சிந்தையில்
நிறைத்தால்
புவியில் போற்றும் புகழுடன்
வாழ்வோம்.

## இயற்கை

பசுமையின் பிரசவத்தில் பரவிடும்
விதைகள்
விதைகளின் முட்டலால் வெடித்திடும்
மண்
மண்ணுக்குள் வைரமென விளைந்திடும்
மரங்கள்
மரங்களின் சுவாசத்தில் மகிழ்ந்திடும்
மானுடம்
மானுடத்தின் கரங்களில் மாற்றங்களின்
பறத்தல்
பறத்தலின் நீட்சியில் வானத்தின் விடியல்
விடியலில் முளைக்கும் நம்பிக்கைச்
சிந்தனைகள்

சிந்தனையில் காணுமிடமெலாம் எழும்பிடும் வண்ணங்கள்
வண்ணமெனும் வாழ்வினில் வீசிடும் வாசம்
வாசத்தை மலராக்கி வழிந்திடும் இயற்கை
இயற்கையின் நீட்சியில் திசையெட்டும் கனிகள்
கனிகளில் பரவிடும் காலத்தின் தீண்டல்
தீண்டும் இன்பங்களில் நிறையட்டும் பசுமை.

**சுமை**

அகவையில் நிறைந்தும்
அகத்தில் நிறையாது
மகவுகள் கொண்டும்
அமைதியில் மனமற்றும்
தாங்கும் பாரத்தை தனக்குள் சுமந்து
ஏங்கும் உடலினை நம்பிக்கையில் நிறுத்தி
தூங்கும் வேளைவரை
துவளாது உழைத்தே
பாரமென யாரிடத்தும்
யாசகம் வேண்டாமல்
தரணியில் நடைபோட்டே
தன்மானம் கூட்டும் வீரத்திற்கு
சுமைகள் சுகமான அனுபவங்களே.

—

சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
அலைபேசி: 9944315732



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.